# தினசரி வழிபாட்டு முறை



# 14. முருகன் துதி

1. ஆறிரு  தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
   கூறு செய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
   ஏரிய மஞ்ஞை வாழ்க யானை தன் அணங்கு வாழ்க
   மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியார் எல்லம்.

2. மூவிரு முகங்கள் போற்றி! முகம்பொழில் கருணை போற்றி !
   ஏவரும் துதிக்க நின்ற ஈராறுதோள்கள் போற்றி ! - காஞ்சி
   மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி ! அன்னார்
   சேவலும் மயிலும் போற்றி! திருக்கைவேல் போற்றி போற்றி!!

3. பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி!
   ஆழிமிசை கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி!
   வாழி திருநாவலூர் வன்தொண்டர்பதம் போற்றி!
   ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி! போற்றி !!

4. உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
   நிலவுலாகிய நீர்மலி வேணியன்
   அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
   மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

5. உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்
நிலை நிறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா நம் விளையாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே ஶரணங்களே

6. வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீரவே

7. விமலமதாய் வேறற்ற வகண்டாகார
விருத்தியினில் விளங்கிய ஸத்குருவே போற்றி!
யமலமதா யகண்ட பரவித்தையாகி
அவித்தையெலாம் நீக்கிய ஸத்குருவே போற்றி!

நிமலமதாம் வித்தைக்கும் அப்பாலாகி
நிச்சலமாய் நின்ற பரமகுருவே போற்றி!
ஸமமதுவாய் சற்றுமொரு சங்கமின்றி
ஸன்மாத்ரமான ஸத்குருவே போற்றி! போற்றி!!

# 15. புஷ்பாஞ்சலி

அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம்
புஷ்பமிந்திரிய - நிக்ரஹ: ।
ஸர்வபூத - தயா புஷ்பம்
க்ஷமா புஷ்பம் விஶேஷத: ॥

ஶாந்தி புஷ்பம் தப: புஷ்பம்
த்யான புஷ்பம் ததைவச ।
ஸத்யம் அஷ்டவிதம் புஷ்பம்
விஷ்ணோ: ப்ரீதிகரம் பவேத் ॥

# 16. நவக்ரஹ ஸ்துதி

ஆதித்தன் ஸோமன் அங்காரகன் புந்தியண்டர் குரு
பேதித்த வெள்ளி சனிராகு கேது பேருரைத்தால்
வாதித்த சூனியம் வல்பிணிச் சண்டை வடுமிடியும்
ஏதித்தலத்திலிராதே மிகச் செல்வ மேலிடுமே